# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 2d and 4th Thursday of every Month at one shilling a Quarter payable in advance.*

௫ம். புத்தகம் சஞ்சிகை ௯.] ௲௮௱௪௰௫௵. வைகாசி ௴. ௮. தேதி வியாழக்கிழமை. Thursday, May 8, 1845. [Vol. V. No. 9.

## இதிகாசச்சுருக்கமும் காலநிருபணவிளக்கமும்.

மீதியோபார்சியராச்சியம்.—ஆதியிலே மீதியரும் பார்சியரும் வெவ்வேறிராச்சியத்தாராயிருந்தார்கள். அவர்களுள் மீதியர்களே முதன்முதற் செழித்தோங்கத் தலைப்பட்டார்கள். எசிக்கியாவுடைய காலத்துக்கு முன் அசீரிய ராச்சியத்துக்குக் கீழ்ப்பட்டிருந்த அம்மீதியர்கள் சயக்சறிசென்னும் இராசாவின் காலத்தில் பாபிலோனியருடன் கூடி அசீரியரோடே எதிர்த்துப் பொருது வெற்றிகொண்டார்கள்.

சயக்சறிசென்பவனுடைய சுதனாகிய அஸ்தயாகிசென்பவன் மீதியரோடு தான் பண்ணிய சமாதானம் நிலைகொள்ளும்படி லீதியவென்னுமிராச்சியத்துள்ள ஓர் இராசபுத்திரியை விவாகஞ்செய்தான். அவர்களுக்கு வேதத்திலே மீதியடறையசென்றும் கிரேக்காசிரியர்கள் செய்தநூல்களில் சயக்சறிஸ என்றும் பேர்பெற்ற டறையஸ் என்னுமோர் புத்திரனுற்பவித்தான். அவன் பிறந்த வருஷத்தில் அஸ்தயாகிசென்பவன் தன் புதல்வியாகிய மந்தேனென்பவளைப் பார்சிய பிரபுக்களிலொருவனாகிய கம்பீசஸ் என்பவனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தான். சிலர் இவனைப் பார்சிய ராசாவென்றும் சொல்லுகிறார்கள். அவர்களுக்குப் புகழ்பெற்ற கைறஸ் என்னுமோர் குமாரன் பிறந்தான். இப்படி அவன் டறையசென்பவனுக்கு மருமகனாகி அவனுக்கு ஒரு வயசுக்கிளையவனாயிருந்தான்.

இரண்டாஞ்சயக்சறிசாகிய டறையசென்பவன்பின்பு இராசாவாக, அவனுடைய மருமகனாகிய கைறசென்பவன் அவனுடைய சேனைகளுக்கதிபதியாகி அவர்களை நடத்திக்கொண்டு வந்தான். மேற்சொல்லிய பிரகாரம் இவ்வாறிராசரிக்கஞ்செய்துவருங்காலத்தில் கைறஸ் பாபிலோனைப் பிடித்துக்கொண்டான். அதன்பின் டறையஸ் பாபிலோனகரத்திற் சென்று கைறசுடன் ஆலோசித்துத் தன் புதுராச்சியபாரத்தை ஒழுங்குப்படுத்தி, ௱௨௰. மாகாணமாகப் பகுத்து ஒவ்வொரு மாகாணத்துக்கு ஒவ்வொரு அதிபதியையும் இவ்வதிபதிகளுக்கு மூன்று பிரதானிகளையும் நியமித்தான். தானியேலென்னுந்தீர்க்கதரிசி இம்மூவருள்ளும் சிரேட்டனானதால் அவனே அவ்விராசரிக்கத்து முதன் மந்திரியாயிருந்தான். அவன் தெய்வாராதனையில் நிலைகொண்டுநின்றது கண்டு டறையசென்பவன் பிறருடைய ஏவுதல்பற்றிப் பேதமையாற் கற்பித்த கட்டளைப்பிரகாரம் எண்பது வயசிலே ஓர் சிங்கக் கெபியில் நிக்ஷேபனம்பண்ணப்பட்டான். பாபிலோனியரைச் சிறைப்படுத்தி இரண்டு வருஷத்துக்குப் பின் கிறிஸ்து பிறக்க, ௫௱௩௰௬. வருஷத்துக்கு முன் டறையசென்பவன் தன்னிராச்சியத்துக்குக் கைறசென்பவனை ஏகாதிபதியாக வைத்துவிட்டிறந்துபோனான். அக்காலத்திற் பார்சியராச்சியம் சிந்துநதி தொடுத்து மத்தியபூமி சமுத்திரம்வரைக்கும் கஸ்பியான் யூக்சயின் என்னும் சமுத்திரங்கள் தொடுத்து அராபிச் சமுத்திரம்வரைக்கும் வியாபித்திருந்தது.

கைறசென்பவன் இராசாவானபோது யூதர்களை விடுதலையாக்கும்படி கற்பிக்க, அவ்விராச்சியத்திற் பற்பல இடங்களிலும் நின்று பணிவிடைகாரர், ௭௲௩௱௩௰௭. பேரைவிட, ௪௰௨௲௩௱௬௰. பேர் வந்து கூடினார்கள். ஏறக்குறைய இவ்வைம்பதினாயிரபேரும் யெருசலேம் நகரத்திற் சென்று முதன்முதல் அந்நகரையும் அதின்கணுள்ள தேவாலயத்தையும் கட்ட அபிப்பிராயங்கொள்ள, அதைக்கண்டுசமாரியர் முதலிய சமீப தேசத்தார் பொறாமைகொண்டு அதற்குத் தடைபண்ணினார்கள். கைறஸ் இறந்தபின் அவனுடைய குமாரனாகிய,

கம்பீசஸ் என்பவன் இராசாவானான். சாமர்த்தியமின்றித் துன்மார்க்கனாயிருந்த இவ்வரசன் முன்னே நெபுகாத்நேசருக்கு அமைந்திருந்த எகிப்துதேசத்தைச் சருவிப்பிடித்துக்கொண்டான். ஒருநாள் குதிரையேறும்போது தனது கட்கம் உறையில் நின்று வழுவித் தொடையிற் பட்டகாயத்தினாலிறந்துபோனான். அவன் இறந்தபின் கொள்ளைக்காரனாகிய,

ஸ்மார்டிஸ் என்பவன் இராசரிக்கமடைந்தான். இவன் பார்சிய தேசத்துயோகியராகிய ஆசாரியர்குலத்திற் பிறந்தவனாதலின் ஸ்மார்டிஸ் யோகியனென்று பெயர்பெற்றான். பிரபுக்கள் ஏழுபேர் இவனுக்கு விரோதமாகச் சதியாலோசனை செய்து இவனைக் கொன்றபின் கைறசுடைய குடும்பம் ஒழிந்துபோனதினால் தங்களிலொருத்தனை இராசாவாகவேண்டுமென்று தீர்மானித்து, ஒருநாளை நியமித்து அந்நாளிலே சூரியனுதித்த பின்பு தங்கள் குதிரைகளிலே முதன்முதற் கனைக்குங்குதிரையையுடையவனையே இராசாவாக்கவேண்டுமென்று நிர்ணயித்தார்கள். இது பார்சியர் தெய்வமென்று வணங்கிவந்த சூரியனுக்கு இட்ட முறையீடாகத் தோற்றுகின்றது. அன்றைக்கு இஸ்தஸ்பீஸ் என்பவனுடைய சுதனாகிய டறையஸ் என்பவனது குதிரை முதற்கனைத்தபடியால் அந்தச்சணமே அவன் இராசாவாகநியமிக்கப்பட்டு,

டறையஸ் இஸ்தஸ்பிசென்னும் பேரைப் பெற்றிருந்தான். இவனை மீதிய டறையசென்பவனிலும் பிற்காலத்தில் ராசரிக்கஞ்செய்த டறையசென்னும் பேரையு

## HISTORY AND CHRONOLOGY.

(Continued from page 57.)

The Medo-Persian Empire.—The Medes and Persians were originally two monarchies, of which the Median first rose to eminence. Previous to the time of Hezekiah, the Medes were subject to the Assyrian monarchy, but revolted from it, and in the reign of Cyaxeres in connexion with the Babylonians, attacked, and overturned it.

Astyages, the son of Cyaxeres, married a Lydian princess, to cement the peace that had been made between that kingdom and Media; and from that marriage was born Darius, called in Scripture Darius the Mede; but called by the Greek writers, Cyaxeres. Astyages, during the same year in which Darius was born, gave his daughter Mandane to Cambyses, a Persian nobleman, or, as others say, the Persian king, in marriage, and of that marriage was born the celebrated Cyrus. Cyrus was, therefore, the nephew of Darius, and was only about one year younger than he.

Darius or Cyaxeres II, succeeded; but Cyrus, his nephew, held the command of the army under him, and conducted the military operations. It was during this reign that Cyrus took Babylon, as already noticed; after which event Darius came to Babylon, and there, in concert with Cyrus, settled the government of his new empire. They divided it into 120 provinces, over each of which a governor was appointed. Over these governors there were three presidents, and the chief of these presidents was the prophet Daniel, who might, therefore, be regarded as the prime minister of that vast empire. Daniel at this time was about 80 years of age, and was cast into a den of lions, for persevering in the worship of God, in defiance of a foolish decree which Darius had been persuaded to make. In about two years after the capture of Babylon, Darius died, leaving Cyrus sole monarch of the empire, B. C. 536. The Persian empire now extended from the river Indus to the shore of the Archipelago, and from the Caspian and Euxine seas, to the seas of Arabia.

Cyrus, on coming to the throne, issued a decree for the restoration of the Jews; in consequence of which, that people assembled from various parts of his empire, to the number of 42,360, exclusive of servants, amounting to 7,337, making a total of nearly 50,000 persons, and proceeded to Jerusalem. The first care of these restored captives was, to rebuild the city and temple of Jerusalem. The jealousy of the surrounding nations, especially the Samaritans, greatly retarded their operations. On the death of Cyrus,

Cambyses, his son, succeeded: a weak and profligate prince. He invaded and obtained possession of Egypt, which had formerly been subdued by Nebuchadnezzar. On mounting his horse, his own sword fell from its scabbard and wounded him on the thigh, of which wound he died. He was succeeded by

Smerdis, a usurper, who is usually called Smerdis the magian, because he belonged to the priesthood, which, in Persia, was called the Magi. Seven of the nobles conspired against him and slew him. The family of Cyrus being now extinct, these nobles resolved that one of themselves should be elevated to the throne. To determine this, they agreed that he whose horse, on a certain day, should first neigh after the rising of the sun, should be king. This seems to have been an appeal to the sun as a god, which the Persians worshipped. The horse of Darius, the son of Hystaspes, having first neighed, he was immediately elected king, and is known by the name of

Darius Hystaspes, and is to be distinguished from Darius the Median, and also from two other princes of the

டைய வேறு இரண்டு இராசாக்களிலும் நின்று வேறுபிறித்தறியவேண்டும்.

அவனுடைய இராசரிக்கத்துப் பதினெட்டாம் வருஷத்தில் பார்சியருக்கும் கிரேக்கருக்கும் ஓர் யுத்தந் தொடங்கிற்று. அதனால் அவ்விரு பட்சத்தாருக்கும் வெகு சேதம் உண்டாயிற்று. சின்ன ஆசியாவிலுள்ள பார்சிய மாகாணத்துத் தலைப் பட்டினமாகிய சார்டிஸ் நகரத்தைக் கிரேக்கர்கள் தகனம் செய்ததினால்டறைஉசென்பவன் அது பெரிய அவமானமென்றெண்ணிக் கிரேக்க தேசத்தைச் சருவிப் போர்செய்யத் தீர்மானித்துத் தன் சேனைகளை மசிடோனியா தேசத்தைச் சுற்றிப்போம்படி எலஸ்பொந்தென்னும் வாய்க்காலுக்கூடாகச் செல்லவிடுத்து அவைகளுக்குச் சகாயமாகப் போர்க் கப்பல்களையும் அனுப்பினான். அந்தக் கப்பற் கூட்டம் ஏதோசென்னும் சிறு மலைக்குச் சமீபித்த கடன்முனையை வளைந்தபொழுது புயல் அடித்ததினால், ௩௱. கப்பல்களும், ௨௰௲. படைகளுமாய்ந் துபோயின. சேனைகளோவெனில் போதிய எச்சரிப்பின்றிப் பாளயமிறங்கினதினால் திரேசியராலே தாக்கப்பட்டுத் தோல்வியடைந்து ஆசியாக் கண்டத்துக்குத் திரும்பிவிட்டன. டறையசென்பவன் தான் நினைத்த காரியத்தை விடாமல் இன்னும் பகைசாதிக்கவேண்டுமென்னும் எண்ணத்தோடு முன்போலச் சுற்றிப்போகாமல் அற்றிக்கா தேசத்தை நாடி மத்தியபூமி சமுத்திரத்துக்கூடாகச் செல்லும்படி வேறு சேனைகளை அனுப்ப, அவைகள் மெரேதோனென்னும் மைதானத்தில் மில்தைடீஸ் என்னும் சேனாபதிக்குக் கீழ் நின்ற எதீனிய சேனைகளாலெதிர்க்கப்பட்டு அனேகம் கொலையுண்டன. அதிலே தப்பிப்பிழைத்த சேனைகள் கப்பலிலேறிக்கொண்டு ஆசியாக் கண்டத்துக்குத் திரும்பிவிட்டன. இன்னும் பகைசாதிக்கவேண்டுமென்னும் எண்ணத்தினால் டறையசென்பவன் திரும்பவும் சேனைகளை அனுப்ப ஆயத்தமாயிருக்கும்பொழுது தனதிராச்சியத்தை ஆளவும் கிரேக்கருடன் யுத்தஞ்செய்யவும் சார்க்சிஸ் என்னுந் தன் குமாரனை வைத்துவிட்டிறந்துபோனான். டறையசுடைய இராசரிக்கத்தில் எஸ்றுவென்னும் யூத வேதபாரகன் பிறந்தான். அவனுடைய செயல்களெல்லாம் அடுத்த இராசரிக்கத்திலே நடந்தன.

டறையஸ் இஸ்தஸ்பிசென்பவனுடைய காலாந்தம் தொடுத்து சிருட்டி தொடங்கி நிகழ்ந்த ஐஞ்ஞூறு வருஷக்கால வகுப்புக்களில் ஏழாம் வகுப்பினிறுதி வரைக்கும் பார்சியருடைய இதிகாசம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கிரேக்கதேசம்.—கிறிஸ்து பிறக்க, ௮௱௮௰௪. வருஷத்துக்குமுன் எதேலியாவென்பவள் யூதேயா தேசத்தை ஆண்டபொழுது லைக்கர்சஸ்என்பவன் லெசிடிமோனென்னுந் தேசத்தில் இராசாதிகாரமும் பிரபுக்களுடைய அதிகாரமும் கலந்த ஓர் இராசரிக்கத்தை ஏற்படுத்தினான்.

அப்பொழுது எதேனகரம் பாரம்பரியமாகத் தோன்றிவரும் ஆர்க்கோனென்னும் நீதிபதிகளாலே பரிபாலிக்கப்பட்டுவந்தது. இராச்சியத்துக்கடுத்த நியாயப்பிரமாணங்களை விதிக்கும் அதிகாரம் சாதாரணமாகப் பிரசைகளிடத்தும் அவ்விராச்சியத்தை நடத்தும் அதிகாரம் பிரபுக்களிடத்தும் ஏற்படுத்தப்பட்டன. அதனால் அவர்களுக்குள்ளே இடைவிடாமல் வாக்குவாதங்களுண்டாயின. ஆதலாற் கிறிஸ்து அவதரிக்க ௬௱௨௰௪. வருஷத்துக்குமுன் வேறே நீதிசாத்திரத்தை ஏற்படுத்தும்படி திரேக்கோவென்பவன் நியமிக்கப்பட்டான். அவன் செய்த நியாயப்பிரமாணங்கள் மிகவும் மதிகேடும் கொடுமையுமுள்ளனவாயிருந்ததினால் அவைகள் சித்திபெறவில்லை. திரும்பவும் நிகழ்ந்த கலகத்தினிமித்தம் நீதிசாஸ்திரங்களைப் பரிசோதிக்கும்படி சோலனென்பவன் நியமிக்கப்பட்டான். அவன் தன் பேற்பாரித்தகாரியத்தை மிகுந்த விவேகத்தோடும் நிறைவேற்றி ஐரோப்பாக்கண்டத்துள்ளபற்பல இராச்சியங்களில் இந்நாள் வரைக்கும் வழங்கிவரும் நியாயப்பிரமாணங்களுக்குப் பீசமாகிய ஓர் நீதிசாத்திரத்தை நிரூபணம்செய்தான்.

சாதாரணமாக ஸ்பார்த்தவென்னுந் தேசத்திலே தலைப்பட்ட ராசத்துவம்பிரபுக்கள் வசமும் எதேனகரத்திலிராசத்துவம் பிரசைகள் வசமுமாயின. கிரேக்க தேசத்திற் பிரசா இராச்சியங்களுக்குள்ளே பிரபுக்களுக்கும் பிரசைகளுக்கும் இடைவிடாமற் போராட்டம் நிகழ்ந்தது அதிலே பிரபுக்களுக்குலெசிடிமோனியரும் பிரசைகளுக்கு எதேனியரும் உதவியாய் நின்றார்கள். எதேனகரத்திலும் அப்படியே பிரபுக்களுக்கும்பிரசைகளுக்கும் கலகம் நிகழ்ந்தது.

டறையஸ் இஸ்தஸ்பிசென்பவன் கிரேக்கர்கள் தனக்குக் கீழமைந்திருக்கிறார்களென்பதற்கு அறிகுறியாக மண்ணும் நீரும் அனுப்பவேண்டுமென்று அவர்களிடத்திற் சில தூதரை விடுத்துத்தெரிவிக்க, அதைக்கேட்ட ஸ்பார்த்தியரும் எதேனியரும் கோபித்து அதற்கிசையாமல் மறுத்ததுகண்டு கிரேக்கதேசத்தைச் சருவிப்பொரும்படி சேனைகளை ஏவினான். அவைகள்மெரேதோனென்னும்மைதானத்தில் மில்தயாதிஸ் என்னும் எதீனிய சேனாபதிக்குத்தோற்றுப்போயின.

name of Darius, who afterwards attained to the empire.

In the 18th year of his reign commenced the war between the Persians and Greeks, which brought so many calamities on both nations. The Greeks having burnt Sardis, the capital of the Persian Province of Asia Minor, Darius could never forget this insult, and determined on an invasion of Greece. He sent an army across the Helespont, round by Macedonia, a fleet being appointed to follow and co operate with it. The fleet, in doubling the Cape of Mount Athos, was overtaken by a storm, and totally disabled, having lost 300 ships and 20,000 men; and the army having encamped without sufficient precaution was attacked by the Thracians, and so roughly handled, that it was forced to return to Asia; Darius, however, was not to be diverted from his project of revenge, but fitted out another army. This he sent directly across the Archipelago to Attica. There it was met on the plain of Marathon by a small army of Athenians under Miltiades, and totally defeated. The remains of the army escaped to the ships and returned to Asia. Still determined upon his scheme of revenge, Darius fitted out another army, but died in the meanwhile, leaving his dominions and his quarrel with the Greeks to his son Xerxes. During the reign of Darius, Ezra, the Jewish scribe, was born; but his public operations belong to a subsequent reign.

The conclusion of the reign of Darius Hystaspes brings the Persian history down to the end of the 7th period of 500 years from the creation.

GREECE.—So far back as 884 B. C. while Athalia reigned in Judah, Lycurgus had settled the constitution of Lacedaemon, as a monarchy, with great powers conferred on the aristocracy.

Athens was then governed by Archons, a kind of hereditary magistrates. But although the legislative authority was nominally in the hands of the people, the executive was in the hands of the nobles. This gave rise to continual contests between ruling families. Some remedy was required, and Draco was called to form a code of laws, 624 B.C. His laws were so absurdly severe and sanguinary, that they could not be executed. A further time of confusion ensued, when Solon was invited to reform the constitution. He executed his task with great success, and constructed a code of laws, which forms the basis of the laws now existing in most of the kingdoms of Europe.

The constitution of Sparta was highly aristocratical; that of Athens was continually becoming more democratical. In nearly all the Greek republics, there was a perpetual struggle between the nobles and the people, the former looking to Lacedaemon as their protector, the latter to Athens. Athens itself was agitated by similar conflicts between the nobles and the people.

Darius Hystaspes sent heralds into Greece, demanding earth and water, as tokens of subjection; which demand was indignantly rejected by Sparta and Athens. Then followed the invasion of Greece by Darius, in which his army was defeated, at Marathon, by Miltiades, the Athenian general.

## ஆத்துமநிண்ணயம்.

[Child's Book on the Soul.]

### ௫. சல்லாபம்.

எலிசாள் அதிகமாய் விளையாடினபடியால் சாயங்காலத்திலே அவள் தவித்துப்போய் அந்திப் போசனமாகிக் கொஞ்ச நேரத்துக்குப் பின்பு மிகவும் அயர்ந்து நித்திரை மயக்கமாயிருந்தாள். இஸ்தானேப்புத் துரைச்சானி அவர்களுடனே மேல் அறைக்குப் போய் அவளை ஒரு பஞ்சணையிலே கிடத்தி விளக்கைத் திரும்ப

## CHILD'S BOOK ON THE SOUL.

### DIALOGUE V.

In the evening Eliza was very tired, she had played so much, and she grew very sleepy soon after tea. Mrs. Stanhope went with her up stairs and put her to bed. She brought the candle down; for Eliza was a good girl,

க் கீழ் அறைக்குக் கொண்டுவந்தாள். எலிசாள் நல்ல பிள்ளையாயிருந்து இராத்திரிதோறும் விளக்கில்லாமலிருளிலே நித்திரைசெய்யும் வழக்கம் அவளுக்கிருந்தது.

பின்பு இஸ்தானேப்புத் துரைச்சாணி உரோபோர்ற்றைக் கூட்டிக்கொண்டு தனது புஸ்தக சாலைக்குட்பட்டுச் சில சித்திரப்படங்களைப் பார்க்க விரும்பவில்லையோவென்று அவனிடத்திற் கேட்க அதிலுந் தன் தாயுடனே பேசுவது தனக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் சொன்னான். அப்படி அவர்களிருவரும் மஞ்சத்திலே உளுக்கார்ந்தபின்பு இஸ்தானேப்புத் துரைசாணி பேசத்துடங்கினாள்.

மைந்தா, எலிசாளுக்கும் அந்தச்செவ்வந்திப் பூவுக்கும் எத்தனை காரியங்களில் ஒப்பனையுண்டென்று நீ இப்பொழுது சொல்லுவாயோவென்றுயார்.

மகன். ஆராய்ந்து சொல்லுவேன் அம்மா. நிறை, சத்துவம், வடிவு, நிறம், வாசனை, உயிரென்றிவைகளிலே அந்தச் செவ்வந்திப் பூ எலிசாளுக்கொத்திருக்கின்றது.

தாய். எலிசாளுடைய உயிருக்கும் அந்தச் செவ்வந்தி மலருக்கும் இருக்கும் வேற்றுமையென்ன?

ம. எலிசாளுக்குச்சீவபிராணியான உயிருண்டு. அப்பூவுக்கோ தாவரஉயிருண்டு.

தா. மைந்தா, எலிசாளுக்கும் அந்தக் கடிகாரத்துக்கும் எந்தெந்தக் காரியங்களில் ஒப்பனையுண்டென்று இப்பொழுது ஆராய்ந்துபார்ப்போமாக.

ம நான் சொல்லக்கூடுமென்று நினைக்கிறேன் அம்மா.

தா. நல்லது ஆராய்ந்து பார்த்துச் சொல்லுக.

ம. அம்மா நிறை, சத்துவம், உருவம், நிறம், பகுத்தலென்றிவைகளின் ஒப்பமாயிருக்கின்றன. அந்தக் கடிகாரத்திற்கு வாசனை உண்டென்று எனக்குத்தோன்றவில்லை.

தா. அந்தக் கடிகாரத்திலே இன்னும் எலிசாளுக்கொத்திருக்கிறஎதாகிலுமுண்டானாற் சொல்லுக.

ம, சற்று நினைத்துப்பார்க்க விரும்புகிறேன் அம்மா.

தா. மைந்தா அப்படி நினைப்பதே சரி. அரிதான கேள்விக்கு மறுமொழி சொல்ல வேண்டிய நேரமெல்லாம் அதற்குச் சொல்லு நேரமளவும் ஆராய்ந்து சொல்லுக.

ம. அவன் இரண்டு மூன்று நிமிஷமளவும் ஆராய்ந்து பார்த்த பின்பு சொன்னதேதென்றால், அம்மா எலிசாளுடைய உள்ளிஸ்தானங்களைக்கொண்டு சொல்ல விரும்புகிறேனென்றான்.

தா. அப்படிப் பார்க்கக் கூடுமென்றால் நீ எதையறிவாய்?

ம. கடிகாரத்திலிருக்கிற சக்கரங்களைப் போல அவளுக்குள்ளுஞ் சுழன்றோடுகிற சில சிறிய சக்கரங்களுண்டாயிருக்குமென்றறிவேன்.

and always went to sleep, alone in the dark, without a candle.

Mrs. Stanhope then went into her library where she kept her books, and took Robert with her, and asked him if he did not wish to look at some pictures, but he said he would rather talk with his mother. So they sat down on a sofa and Mrs. Stanhope began.

Mother. See, my son, if you can remember in how many things Eliza and the rose are alike.

Robert. I will try if I can, mother. The rose is like Eliza, in having *weight*; *hardness*; *form*; *colour*; *parts*; and *life*.

M. What is the difference between Eliza's life, and the life of the rose?

R Eliza has *animal life*, but the rose has *vegetable life*.

M. Now let us see, Robert, in how many things Eliza and the watch are alike.

R. I think I can tell, mother.

M. Well, try.

R. They are alike, mother, in having *weight*, *hardness*, *form*, *colour*, and *parts*.

M. Has the watch nothing else like Eliza?

R. I want to think a little, mother.

M. That is right, my son; when you have a hard question to answer, always take time to think.

(Robert thinks for two or three minutes, and then says,)

R. Mother, I wish I could look inside of Eliza.

M. Well, what if you could?

R. I think, I should see some little wheels going round and round, like those in the watch.

M. What makes you think so, Robert?

R. Mother, you know the little things in the watch, that you showed me, the other day. Let me look at them now.

M. Here, take the watch.

R. Mother, what do you call these two little things that go round and round, and tell us what o'clock it is?

M They are called *hands*.

R. That is strange, mother, I was going to call them so, and to tell you, that the little wheels inside make them go, just as *something inside of Eliza, which makes her hands go*.

M. We must try to find what *this something* is, inside of Eliza, that makes her hands go.

R. That we can never do, mother.

M. Why not, my son?

R. Oh! mother, you could not open my little sister, and look inside of her, without killing her.

M That we will never do. But, do you remember the little boy who died, last winter, in the house, just beyond the bridge, and that I took you to see the corpse, before it was buried?

R. Yes, mother, and I never before felt as I did while I was looking at that little boy. I touched his cheek, and it was as cold as ice. I took hold of his little hand, but it was stiff. He had stopped breathing. He could not see nor hear, nor move. Could he feel any, mother?

M. No, my son, no more than a pebble can.

[To be continued.]

தா. மைந்தா எதினால் அப்படி நினைக்கிறாய்?

ம. ஒரு நாள் நீரெனக்குக் கடிகாரத்திலுள்ள நுட்பமான கருவிகளைக் காண்பித்தீரல்லோ அம்மா, இப்பொழுது அவைகளை நான் பார்ப்பேனாக.

தா. நல்லது கடிகாரத்தை வாங்கிப் பார்

ம. அம்மா சுழன்றோடி நேரத்தைக் காட்டுகிற இவ்விரண்டு சிறிய கருவிகளுக்குப் பேரென்ன.

தா. அவைகளுக்கு விரற்களென்றுபேராம்.

ம. அது மிகவும் ஆச்சரியந்தானம்மா. நானும் அவைகளுக்கு அந்தப் பேரைச் சொல்லி எலிசாளுக்குள் இருந்து விளங்குகிற யாதொரு பொருள் அவளுடைய கைகளை அசையப்பண்ணுந்தன்மைபோலக்கடிகாரத்திலிருக்கிறஅச்சிறியசக்கரங்களும் அவைகளைச் சுழலச் செய்யுமென்று உமக்குச் சொல்ல நினைத்தேன்.

தா. எலிசாளுக்குளிருந்து அவளுடைய கைகளை அசையப்பண்ணுகிற வஸ்து இன்னதென்றறியும்படி நாம் பிரயாசப்படவேண்டும்.

ம. அம்மா அது இன்னதென்று நாம் ஒருக்காலும் அறியக் கூடாது.

தா. மைந்தா என் அறியக்கூடாது?

ம. ஓகோ! என் சிறிய சகோதரியைக் கொலைப்படுத்தாமல் அவளை அறுத்துப் பிளந்து அவளுக்குள் இருப்பதின்னதென்று காணக்கூடாதம்மா.

தா. ஒருக்காலும் அவளைக்கொலைசெய்யமாட்டோம். ஆனாலும் போன குளிர் காலத்திற் பாலத்துக்கப்பாற் சற்றுத் தூரமாயிருக்கிற அந்தச் சிறு மனையில் ஒரு சிறு பையன் இறந்துபோய் அவன் அடக்கப்படுமுன்னே அவனைப் பார்க்கும்படிக்கு உன்னையுங் கூட்டிப்போயிருந்தேனென்று ஞாபகமுண்டா?

ம. ஆம் எனக்கு ஞாயகமுண்டு அம்மா, அந்தச் சிறுபையனைப் பார்த்தபொழுது நான் முன்னொருக்காலுமுணராத உருக்கத்தை அடைந்தேன். அவன் கன்னத்தைத் தொட்டுப் பார்த்தேன், அது உறைந்த சலத்தைப் போற் குளிர்ந்திருந்தது—அவன் சிறிய கையைப் பிடித்துப் பார்த்தேன் அது விறைத்துப் போயிற்று—அவன் சுவாசமற்றுப்போயிற்று—பார்க்கவுங் கேட்கவும் அசையவுங் கூடாதவனானான். அவன் கொஞ்சமாகிலுமுணர்ந்தறியத்தக்கவனாயிருந்தானோ அம்மா?

தா. இல்லை மைந்தா, ஒரு பருக்கைக் கல் உணரக்கூடாதிருப்பது போல அவனுமுணரக்கூடாதவனாயிருந்தான்.

[தொடர்ச்சி.]

BRIEF HISTORICAL VIEW OF CEYLON.

இலங்கை இராசாக்களின் வரலாறு.

(Continued from page 60.)

(சருகூ) லே தாதுசேனன் தமிழரெல்லாரையுஞ்சங்காரம்பண்ணித்தீவுமுழுதையுந் தனதாணைக்குட்படுத்தி (கஅ) வருஷம் இராசாவாயிருந்து அநேகங் குளங்களையும் மாளிகைகளையுஞ் செப்பனிட்டு விந்தனையிலுள்ள அந்தக்கனுஓயை என்ற வாய்க்காலையும் வெட்டுவித்து, (கஅ) கேணிகளையும் தோண்டுவித்து, (கஅ) சிறு விகாரைகளையுங் கட்டுவித்தான். அவனுக்குக் காசியப்பன், மோகலன் என்னும் குமாரரும் ஒரு குமாரத்தியுமிருந்தார்கள். அம்மகளைத் தன் மருமகனுக்குக் கலியாணம் பண்ணிக்கொடுத்து அவனையும் சேனாபதியாக்கி வைத்தான். அவன் அவளைத் தன்பெண்சாதியென்றும் பாராமல் நியாயமில்லாமல் நிருவாணமாய் விட்டு அவள் தொடையிலே அடிப்பித்தான். அவளுடைய பிதா இதையறிந்து அவனுடைய தாயை அப்படி நிருவாணமாய்விட்டுச் சுட்டுக்கொன்றான். அந்நாள் முதலாக அவனுடைய மருமகன் அவனுக்கு விரோதமாய்க் கோபங்கொண்டு காசியப்பனையுஞ் சேர்த்துக்கொண்டு இராச்சியத்திற் கலகம் பண்ணித்திரிந்து அதைப் பிடித்துக்கொள்ள வகைதேடி இராசாவையுமுயிரோடே பிடித்து இராச்சியத்தையும் பிடித்துக்கொண்டான். அப்பொழுது இராசாவினிளைய குமாரன் மோகலன் அவர்களுடனெதிர்த்துப் பொரநினைத்துங் கூடாதினாற் சம்புத்தீவுக் கோடிப்போனான். இராசாவை மறியலிற் போட்டுக் காசியப்பனிராசாவானான். அதன் மேல் காசியப்பன் தன் பிதாவை நிருவாணமாய் விலங்குபோட்டுக் கிழக்குமுகமாய் நிறுத்தி அவனைச் சுற்றிலுஞ் சாந்துபோட்டு மூடிப்போட்டான்.

(சஎஎ)லே அவனுடையகுமாரன்முதலாங் காசியப்பனிராசாவாகி அநுராசபுரத்தைவிட்டு ஆருஞ் செல்லுதற்கரிய ஒரு கன்மலையின்மேலே போய்த் தனக்கு ஒரு துருக்கத்தைச் சமைத்து அதற்குள் தன திரவியங்களையும்இராச்சிய சின்னமான முடியையுஞ் செங்கோலையும் வைத்து அங்கே வாசம்பண்ணினான். அம்மலையின்மேலே சிங்க சொரூபங்கள் வெட்டப்பட்டிருந்தபடியால் அதற்குச் சிங்ககிரியென்று பெயராயிற்று. அவன் (கஅ) வருஷம் இராச்சியம்பண்ணியிருந்து தன்றம்பி முதலாம் முகிலனுடன் யுத்தம்பண்ணித் தோற்றோடுகையில் தன்னுயிரை மாய்த்துக்கொண்டான்.

(சகூரு) லே அவன்றம்பிமுதலாம் முகிலனிராசாவாகி (கஅ) வருஷமிராச்சியம்பண்ணினான். இவன் முன் தன்றமையனுடைய கலாதிக்குப் பயந்து சம்புத்தீவிலே போயிருந்த காலத்திலே ஒரு பெரிய சேனையைச் சேர்த்திருந்தான். அவன் அச்சேனையோடே வந்திறங்கிக் கொழும்பிலே ஒரு கோட்டையைக் கட்டித் தன் றமையன் மேற் படையெடுத்துப் போய் இராசதானிக்குக் கிட்டமானத்திலே அவனைச் செயித்துத்தன் தகப்பனுடைய சாவுக்குடந்தையாயிருந்த மந்திரியையும் அதற்குதவியாயிருந்த வேறு ஆயிரம் பெயரையுங்கொன்று புத்தனுடைய தலைமயிரையும் அநுராசபுரத்திலே வைத்து அதைத் தனதிராசதானியாக்கியிருந்தான்.

(ருகரு) லே அவனுடைய குமாரன் குமாரதாத்துசேனனிராசாவாகி (கூ) வருஷங்களாக அரசுபுரிந்துகொண்டிருக்கையில் பண்டிதனான காளிதாசன் இலங்கைக்கு வந்தார். அவ்விராசா ஒரு வேசிவீட்டுக்குப் போக்குவரத்துப்பண்ணுவது வழமையாயிருந்தது. ஒரு நாளாகிறபொழுது அவனவள்வீட்டுச் சுவரிலே ஒரு வெண்பாவின் முதலிரண்டடியையும் எழுதி நிறைவேற்றுபவனுக்கு அவன் என்ன கேட்டாலுந் தாங் கொடுப்போமென்றொரு பந்தையத்தையுந் தீட்டிப் போனான். உடனே அவனிற்பிறகு அந்த வேசிவீட்டுக்குப் போன காளிதாசன் அவ்விரண்டடிகளையுங் கண்டு மற்ற இரண்டடிகளையுமெழுதி வெண்பாவைமுடித்தான். அவ்வேசி இதையறிந்து அவருக்குக் கிடைக்கிற வெகுமானத்தைத் தனதாக்கிக்கொள்ளும்படி காளிதாசனைக் கொன்று தன் வீட்டுத்தளத்துக்குள்ளடக்கம்பண்ணினாள். அவளிப்படிச் செய்தது இராசாவுக்கு வெளிப்பட்டவுடனே அவர் பிரேதத்தை வெளியே எடுப்பித்து வெகு ஆடம்பரமாய்த் தகனம்பண்ணுவித்து அதைக்குறித்து மனவிதனமடைந்து மனக்கவலையை மாற்றக்கூடாமற் காளிதாசனைத் தகித்த தீயிலே விழுந்து மாண்டுபோனான்.

(ருஉஉ) லே அவனுடைய குமாரனாகிய கீர்த்திசேனன் இராசாவாகி (கூ) வருஷமிராச்சியம்பண்ணினபின்பு அவன் தாய்மாமனான சீவகனாற் சீவநாசமடைந்தான்.

(ருகூக) லே சீவகன் இராசாவாகி (உரு) நாளிராச்சியம்பண்ணின பின்பு முகிலனுடைய குமாரனாகிய இலாமினி உபத்திசனென்பவனால் கொலையுண்டான். அவன் மூன்றாம் இலாமினி உபத்திசனென்னும் பெயர் சூட்டப்பட்டு சிங்காசனத்திலேறி ஒரு வருஷமும் (சு) மாசமுமாக இராச்சியம்பண்ணினான். இடையிலே அவன் கட்புலனை இழந்துபோனபடியால் அவனுடைய மருமகன் சீலகாலன் இராசாசனத்தைப் பிடிக்க நாடினவிடத்து இராசாவுடைய குமாரனான காசியப்பன் அவனுடனே போராடி இறந்துபோன கவலையைச் சகிக்கமாட்டாது இறந்துபோனான்.

(ருகூச) லே அம்பாகாசலாமியவான் இராசாவாகி (கரு) வருஷமிராச்சியம்பண்ணினான். அவனுடைய இராச்சியத்தின் (கஉ)ம் வருடத்திலே ஒரு வியாபாரியானவன் வைத்தூலியகோட்டாடு அடங்கிய ஒரு எட்டை இலங்கையிலே கொண்டு வந்து பரப்பினான். இராசாவும் அதினோக்கத்தை யறியாது அதின் கோட்பாடுகளை அநுசரித்துவந்தார். குருக்கள்மாரிலும் அநேகர் ஏற்றுக்கொண்டார்கள். ஆகிலும் மகாபூகியான சோதிபாலியென்னுங் குருவானவர் அதின் சூட்சத்தை அறிந்து அதின் தப்புக்களை வெளியாக்கினார்.

(ருசஎ) லே அவனுடைய இரண்டாங் குமாரனாகிய முதலாந் தாப்புழுவென்பவன் இராசாவாகி ஆறுமாசமும் ஆறுநாளுமரசுசெய்து தன்றம்பியைக்கொன்று தன்றமையனோடே யுத்தம்பண்ணித் தோற்றுத் தன்னுயிரை மாய்த்துப் போட்டான்.

(ருசஎ) லே அவன் தமையன் இரண்டாம் முகிலன் இராசாவாகி (உய) வருஷமிராச்சியம்பண்ணி மளவத்தையென்னும் ஆற்றை மறித்துக்கட்டி அதின் தண்ணீரைக் கல்லோயை பூகாவோயையென்னுங் குளங்களுக்குப் பாய்ச்சுவித்தான். அவன் மனையாட்டி நஞ்சிட்டுக் கொல்லுமுபாயத்திற் கைவந்தவள்.

(ருஅஎ) லே அவனுடைய குமாரன் சிறுபராயமாயிருக்கக்கொள்ளத் தாயின் மூலமாய்ச்சிங்காசனத்திலேறிப்பத்தொன்பதுநாள் இராச்சியம் பண்ணினபின்பு அவனைச் சேனவியென்னும் மகாநாகன் கொன்றுபோட்டான். சிலர் அவனுடைய இராச்சியபாரம் (ககூ) வருஷங்களாக நிலைத்திருந்ததென்று சொல்லுகிறார்கள்.

(ருஅசு) லே சூரியமரபு அல்லது சாகிய சந்ததியென்று சொல்லும் இராசமரபிற் பிறந்தமகாநாகன் என்பவன் இராசாவாகி மூன்று வருஷம் அரசு செய்தான். அவன் பத்தியாய் நடந்து அநேக திருப்பணிகளைச் செய்து ஆதீனமாகச் சில கழிவுகளைக் கொடுத்து வந்தான்.

தொடர்ச்சி.

---

செல்வநிலையாமை.—INSTABILITY OF WEALTH.

அ. செல்வர்யாமேன்றுதாஞ்சேல்வழியேண்ணுத
புல்லறிவாளர்பெருஞ்செல்வமேல்லிற்
கருங்கோண்மழவாய்திறந்தமின்னுப்போற்றேன்றி
மருங்கறக்கெட்டுவிடும்.

| பதம் | உரை |
|---|---|
| செல்வர் | பாக்கியவான்கள் |
| யாம் | நாம் |
| என்று | என்று |
| தாம் | தாங்கள் |
| சேலவழி | செல்லுமிடத்தை |
| எண்ணுத | நினையாத |
| புல்லறிவாளர் | அற்பவறிவாளருடைய |
| பெருஞ்செல்வம் | பெரியசெல்வமானது |
| எல்லில் | இராக்காலத்தில் |
| கரும் | கருமையாகிய |
| கோண்மழ | மேகம் |
| வாய்திறந்த | வாய்விட்டுமின்னிய |
| மின்னுப்போல | மின்னலைப்போல் |
| தோன்றி | தோற்றப்பட்டு |
| மருங்கு | (தோன்றிய) இடமும் |
| அற | இல்லாமல் |
| கெட்டுவிடும் | கெட்டுப்போம், எ—று. |

# MORNING STAR.

## Jaffna, May 8th, 1845.


### ROMANISM IN GERMANY.

At TREVES, in Germany, the Bishop of the Roman Church has been exhibiting for about nine months a gown, which is said to be one worn by the Lord Jesus Christ when he was upon earth. How the Bishop procured it does not appear. Nevertheless the superstitious views of the lower classes of Roman Catholics in Europe favoring the idea that some wonderful virtue existed in this gown that would impart religious merit to those who visited its shrine, and made offerings there, and the Bishop finding his own interest in promoting such a superstition, the knowledge of it has been spread abroad and thousands and thousands have flocked there to see the holy garment and obtain the benefit supposed to be derived from it. 800,000 pilgrims are said to have visited it, as long ago as last October.

Some Catholic Priests however, in that neighbourhood, being too honest and too conscientious to lend their influence to this deception, refused to accompany their parishioners to see the holy garment and even persuaded them from undertaking the pilgrimage. One of them, M. Ronge, addressed a public letter to the Bishop of Treves, denouncing the exhibition as an imposition. In consequence of this he was excommunicated. Thereupon M. Ronge addressed a pamphlet to the lower orders of the Roman clergy, calling upon them to unite their exertions with his, in the pulpit and in the confessional, against the Bishop of Rome, in order to found by Council and Synod a national German Catholic church. The Police immediately seized the pamphlet. He has however secured a goodly number of adherents, and in other parts of Germany the secession from the Roman Church, is constantly extending. The following is the confession of Faith adopted by M. Ronge and his followers.

"1. We throw off the allegiance to the Bishop of Rome and his whole establishment.

2. We maintain full liberty of conscience, and condemn every compulsion, falsehood, and hypocrisy.

3. The basis and the contents of the Christian belief are the Bible.

4. The free investigation and interpretation is not to be restained by external authority.

5. As the essential contents of our faith, we lay down the following symbols: 'I believe in God the Father, who has created the world by his omnipotent word, and who governs it in wisdom, justice, and love.' 'I believe in Jesus Christ our Savior, who, by his doctrine, his life, and death has saved us from bondage and sin.' 'I believe in the working of the Holy Ghost on earth, a holy universal Christian church, forgiveness of sin, and life everlasting. Amen.'

6 We recognise only two sacraments as instituted by Christ, *Baptism* and *the Lord's Supper*.

7. We uphold infant baptism, and receive by solemn act of confirmation, as self-acting members of the congregation, those persons who are sufficiently instructed in the doctrines of faith.

8. The Lord's Supper will be distributed to the congregation, as instituted by Christ in both forms. Auricular confession is rejected.

9. We recognise marriage as an institution ordained by God, and therefore to be kept holy by man; we maintain for it the sanction of the Church and consider, with regard to the conditions and restrictions applying to it, the laws of the State alone as binding.

10. We believe and confess that Christ is the only Mediator between God and man; and we reject, therefore the invocation of saints, the adoration of relics and images, the remission of sins by the priests, and all pilgrimages.

11. We believe that the so-called good works have only value in so far as they are the emanation of Christian sentiments; we reject therefore, all commands of fasting.

12. We believe and confess that it is the first duty of the Christian to manifest his faith by works of Christian love"

The latest accounts which we have seen state that the commotion which this new doctrine has produced in Germany and Poland is on the increase. M Ronge has already been burned in effigy; with as many copies of his manifestoes as could be collected, by fanatical peasants in the vicinity of Coblentz.

---

*Retirement of the Honorable the Colonial Secretary.*—The Honorable Mr. Anstruther, after about 25 years of public service, 12 of which have been passed as Colonial Secretary, is about to retire from the island. His long experience in the civil affairs of the island, the independence and liberality of his views, and the soundness of his judgment, have given a high value to his services, which are acknowledged to have been generally directed to the promotion of the best interests of the Colony, and justly render his retirement a matter of sincere regret both to his friends and to the public. The interest he has manifested, of late years especially, in promoting the welfare of the natives, by providing the means of education for all classes; and by supplying inducements for young men of talent and ambition to qualify themselves for public usefulness, by opening to them places of trust suitable to their capacities, will entitle him to their respectful and grateful remembrance. It is in no small degree owing to his influence, we believe, that the School Commission have undertaken the work of *vernacular* education,—and that this education is to be as *Christian* in its character as the circumstances of the case will allow. Missionary institutions have enjoyed his favorable regard, and not unfrequently his official patronage and support. Believing that Christianity is the only true source of temporal and eternal good to men, he has been anxious that the natives should be made acquainted with its truths and enjoy the benefit of its influence. In his remarks before the Legislative Council on introducing an "Ordinance to promote the building of places of Christian worship," &c. he expressed his satisfaction that the adoption of that Ordinance would declare for the first time Ceylon to be a *Christian* Colony. When one in his responsible position, possessing his qualifications, having his efforts directed to such high ends as his appear to have been, is led to retire from public service, he cannot fail to carry with him the sincere affection and esteem of those whose welfare he has so long and so assiduously sought to promote. We hope his retirement may be as pleasant and satisfactory as his public services have been difficult and useful, and that his successor may inherit a double portion of the wise and liberal and Christian spirit by which his exertions for the good of the colony have, of late years, been animated.

---

*Disconnection of the Ceylon Government with Idolatry.*—We learn from the Colombo Observer of the 1st inst. that agreeably to public notification, His Excellency the Governor held a Levee at the Pavilion at Kandy, on the 23d ult. which was numerously attended by almost all the Kandian Chiefs and Priests and other inhabitants of the central Province, for the purpose of making known to them the orders of the Home Government, forbidding in future the appointment and nomination of chief Priests under the Governor's seal and signature, also any interference of the Government Agent in his official capacity, in Budhistical ceremonies, and requiring that the custody of the keys of the celebrated shrine of the tooth of Budhu, should be delivered over to the chiefs themselves, who must appoint a committee of their own body to superintend their religious affairs. The Chiefs and Priests are said to have received this communication with surprise, and in reply begged that his Excellency would allow the custody of the keys to remain with the Government Agent for a short time till they could determine what course to pursue upon a matter of so much importance. With this request His Excellency complied. Consequently a meeting was to have been held on the 25th ult. for the purpose of petitioning Her Majesty not to dissolve the connexion the Government had hitherto sustained with Budhistical idolatry.

---

*The Bishop of Ceylon.*—The Right Rev. JAMES CHAPMAN, who was just been appointed to the new Bishopric of Ceylon, is in the forty-sixth year of his age, and was ordained exactly twenty one years ago, viz: in 1824. He was educated at Eton and King's College, and, as is well known, he was for several years one of the masters of Eton school. Ten years after he was ordained, viz: in 1834, he was presented by his own College to the living of Dunton Waylett, near Brentwood in Essex, which is valued at £442 per annum. In the same year he married Miss Keate, the daughter of the Rev. Dr. Keate, Canon of Windsor, and late head-master of Eton, in which school, as before mentioned, Mr. Chapman had been for several years Assistant-master.——*Colombo Observer.*

---

THE TOUCH STONE—is the name of an English and Tamil Periodical, in 8 pages 4to. issued from the Catholic Press at Colombo, the first No. of which the Editor has had the politeness to send us. It is to be published on the first Thursday of every month and sold at *three* pence per copy. It proposes to contain articles on "political matters, religion, commerce, general literature and history, with a summary of important news." It appears from the religious articles in the present No. that it is to be devoted to the promotion of the religious views of the Roman Catholics, and we as Protestants must therefore expect no small share of attention in its columns. One article in the present No., which we may notice more particularly hereafter, contains some very slanderous allusions to the efforts of American missionaries in Jaffna. We nevertheless hail its appearance with pleasure, as we have nothing to fear, and much to hope for, from any examination of Protestantism or exposition of Romanism that may be given to the public through such a medium.

The minds of men are too much enlightened in these days to receive alleged truths at the mere *dictum* of religious teachers. Reasons must be given for the doctrines proposed, and evidence produced of the facts alleged before they will be regarded as true and credible; especially when they relate to the grounds of men's *religious* belief. If the *Touch Stone* will apply its powers to determine the degree of alloy there is in human opinions, holding the Catholic and Protestant views of religion equally subject to examination, we wish it *good speed* and much success in its efforts to shew men where the truth lies.

Everywhere Protestants are found to be the readiest and ablest advocates of a *free Press* and of free discussion, and they are willing that their doctrines should fall if they cannot stand investigation.

Let Roman Catholics grant as much concerning their doctrines, and freely distribute the Bible and encourage investigation on the part of their own people, instead of teaching it to be a mortal heresy for a man to *doubt* the truth of Romish doctrines, and they would place themselves in a better position than that they now occupy, for finding the truth and shewing it to others.

---

*The Season.*—After several months of extraordinary drought and heat we last Sunday and Monday experienced a most agreeable change of temperature and heavy showers of rain, the influence of which has been most reviving. We understand that on Sunday the lightning struck the Flag Staff in the fort and shivered it, and on Monday two fishermen of Tolpuram, as they were returning home, before they had left the water were struck dead by the lightning, and a third was knocked down and remained insensible for a long time, but was not killed. One of the men who was killed had one ear torn off by the lightning. The season since the annual rains has been remarkable for its heat and for its general unfavorable influence upon health. The thermometer has ranged 2 or 3 degrees higher than it does in ordinary seasons. Among the natives, fever has prevailed to a great extent and the proportion of deaths has been much larger than is usual. The reports of natives on the subject are very various,—one declaring that one in five and others that one in ten of the cases of sickness have terminated fatally. It appears to us desirable that the means should be had of securing a correct registration of deaths among the natives, though from the superstitions of the people and the want of fidelity in the agents appointed for the purpose it would doubtless be attended with great difficulty.

